29th October 1958]

THE HON. SRI P. KAKKAN : முன்பு லேபர் டிப்பார்டுமெண்ட் என் றிருந்து செய்துகொண்டிருந்த வேலையைவிடவும் அதிகப்படியான வேலைகளை செய்வதற்குத்தான் ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மெண்ட் ஏற்படுத்தப்பட்டி ருக்கிறது. எங்கு எல்லாம் ஹரிஜன ஆசிரியர்கள் கிடைக்கவில்லையோ அங்கெல்லாம் மற்ற சமூகத்திலுள்ளவர்களை நியமித்து வருகிருர்கள். ஹரிஜனங்களுக்கு வேலை செய்வதற்கு பலர் காத்துக்கொண்டிருக்கிருர் கள். ஆகவே மற்ற சமூகத்தினர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு வருகிறது.

SRI K. VINAYAKAM : ஹரிஜனங்களை மாத்திரம்தான் நியமிக்க வேண்டும் என்றிருக்கிற இடத்தில் மற்ற சமூகத்தினர்களையும் நியமித்தால் ஒருவரோடு ஒருவர் பரஸ்பரம் நட்புறவு ஏற்படுவதற்கு வசதி யாக இருக்கும். ஆகவே அதை உத்தேசித்து ஜாதி அடிப்படை என்றில் லாமல் ஹரிஜனங்களையும் மற்ற சமூகத்தினர்களையும் சேர்த்து நியமிப்ப தற்கு சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மையாகவே குழந்தைகளுக்கு நல்ல முறையில் யார் கற்பித்துக்கொடுக்கிருர்களோ அவர்களைப் பார்த்து நியமிக்கப்படுகிறதே ஒழிய ஜாதி அடிப்படையில் மாத்திரம் நியமிக்கப்படுவதில்லை.

Acquisition of house-sites in Reddipalayam

* 691 Q.—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any mahazar from the villagers of Reddipalayam, Polur taluk, for acquisition of house-sites has been received recently; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN (a) Yes, Sir.

(b) The remarks of the Collector of North Arcot have been called for on the requests contained in the mahajar.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த ரெட்டிபாளையம் ஒரு சிறு கிராமம். அங்கு ஒரு வீட்டில் பத்து முதல் பதினைந்து குடும்பங்கள் வசித்து வருகிருர்கள். பக்கத்தில் நில சொந்தக்காரர்கள் இருக்கிருர்கள். பக்கத்தில் கால்வாயும் ஓடுகிறது. இவர்களுக்கு வேண்டிய இடம் கேட்டால் அதுவும் கொடுக்கமாட்டோம் என்கிருர்கள். இதன் பேரில் மூன்று மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அதன் பேரில் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி நான் முன்பு சொன் னேன். கலெக்டர் அவர்களிடத்தில் இதைப்பற்றி ரிப்போர்ட் கேட்கப்பட்டி ருக்கிறது. அது வந்தவுடன் இதில் வேண்டிய முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Statistics about Schools and Colleges

* 692 Q.—SRI N. R. THIAGARAJAN and SRI K. GOPALA KOUNDER : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் தற்போதிய ஜில்லாக்களில் 1946-ல் ஆரம்பப் பள்ளிகள் எத்தனை, அதில் படித்த மாணவர் தொகை என்ன ?

(ஆ) உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை, அவைகளில் படித்த மாணவர் தொகை என்ன ?

(இ) கல்லூரிகள் எத்தனை ? அவற்றில் படித்த மாணவர் எத்தனை ?

(ஈ) 1958 மார்ச்சில் சென்னை ராஜ்யத்தில்—

(i) எத்தனை ஆரம்பப் பள்ளிகள், அவைகளில் எத்தனை மாணவர்கள் ?

(ii) எத்தனை உயர் நிலைப்பள்ளிகள், அவைகளில் எத்தனை மாணவர்கள் ?

(iii) கல்லூரிகள் எத்தனை ? அவைகளில் மாணவர் எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : *(a)*, *(b)*, *(c) and (d)* A statement[a] is placed on the table of the House. I may also point out that the 1946 figures related to the entire Madras State as it then existed. Separate figures could not be calculated immediately.

SRI N. R. THIAGARAJAN : நான் கொடுத்திருக்கின்ற கேள்வி சரியாகத்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். இதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சரியான புள்ளி விவரங்களை சேர்த்து பதில் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already explained this, Sir. The hon. Member wanted figures for the districts that we have in the Madras State. For the year 1946 separate figures could not be obtained. So figures relating to 1946 in the Madras State as it existed then have been given.

11-40 a.m. SRI A. VEDARATHNAM : 1946-ம் வருஷத்திய புள்ளி விவரத்தைக் காட்டிலும், 1957-ம் வருஷத்திய புள்ளி விவரம் ஆரம்பப் பள்ளிகள் விஷயத்தில் குறைவாக இருக்கக் காரணம் மாகாணப் பிரிவினை என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் கல்லூரிகள் விஷயத்திலும், ஹை ஸ்கூல்கள் விஷயத்திலும் இந்தப் புள்ளி விவரங்கள் மாறுபட்டிருக்கக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே பார்க்கும் போது நான் ஒன்றாக இருக்கும்போது, 1946-ல் 633 ஹை ஸ்கூல்கள் இருந்தன. பிரிந்த பிற்பாடு, 891 ஹை ஸ்கூல்கள் 1957-ம் வருஷக் கடைசியில் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லை. அவ்வளவு அதிக ஹை ஸ்கூல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

Hut dwellers

* 693 *Q.*—SRI N. MARUDACHALAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of applications received from hut-dwellers in Coimbatore district for assignment of the poramboke lands; and

(b) the action taken thereon by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : *(a) & (b)* The time and labour involved in gathering the particulars asked for in the question will not be commensurate with the advantages to be gained.

SRI N. MARUDACHALAM : ஸார், ஹரிஜனங்கள் வீடு கட்டிக் கொள்வதற்கும் விவசாயம் செய்வதற்கும் விண்ணப்பம் போடுகிறார்கள். அந்த விண்ணப்பங்களுக்கு உடனடியாக பதில் கிடைப்பதில்லை. பதில்

[a] Printed as Appendix V on page 85 infra.